செ.வெ.எண்: 93 / மார்ச் /2020 நாள்: 29.03.2020

**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பகுதியில் பொதுமக்கள் வசதிக்காக மதுரம் மைதானம், அண்ணாநகர் உழவர் சந்தை, அண்ணா விளையாட்டு அரங்க முன்புற வளாகம், காவேரி பாலம் ஆகிய இடங்களில் சில்லறை வியாபாரிகளால் காய்கறிகள் விற்பனை செய்யப்பட உள்ள இடத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் இன்று (29.03.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

---------------------

**மேலும் காய்கறிகள் விற்பனை செய்யப்படும் இடங்களை பார்வையிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பகுதியில் பொதுமக்களுக்காக காலை 6 மணி முதல் பிற்பகல் 2.30 வரை சில்லறை வியாபாரிகளால் காய்கறிகள் விற்பனை செய்யப்படும் மதுரம் மைதானம், கீழபுலிவார் ரோடு, தென்னூர் அண்ணாநகர் உழவர் சந்தை, அண்ணா விளையாட்டு அரங்க முன்புற வளாகம், காவேரி பாலம், ஆகிய இடங்களில் சிறு வியாபாரிகள் கடை அமைக்கவும், பொது மக்கள் சமூக விலகல் கடைபிடிக்கவும், அனைவரும் மாஸ்க் அணிய வேண்டும். இந்த உத்தரவை மீறும் நபர்கள் மீது வழக்கு பதிவு செய்து சட்டபடியான கடுமையான நடவடிக்கைகள் காவல் துறையின் மூலம் எடுக்கப்படும்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**